180814

சொல்வது ஒன்று
செய்வது வேறு
(பெண் கல்வி)

Y15(J)
N22
180814

563

தமிழ்ப் பல்கலைக்கழகப் பதிப்பு—1

30 JAN 197

# சொல்வது ஒன்று செய்வது வேறு

(பெண் கல்வி)

Y15(T)
N22
180864

ஜே. என். இராமநாதன்

ஓ

# சொல்வது ஒன்று
# செய்வது வேறு

---

## பெண் கல்வி

30 JAN 1923

---

இது
டாக்டர் டி. எம். நாயர் அவர்களின் வாழ்க்கை வரலாறு
ஆக்கியோரும், சொற்பெருக்காளரும் ஆகிய

**திரு - ஜே. என். இராமநாதன்**

அவர்களால் எழுதப்பட்டது

மலர் - 1

தமிழ்ப் பல்கலைக்கழகப் பதிப்பு நிலையம்
மலைச்சாலை, சென்னை
1922
விலை அணா நான்கு

376
1232

# அணிந்துரை

அவன், அவள், அதுவென்னும் முப்பொரு ளுண்மையைத் தெளிவுறத் தந்த திந்தமிழ் மொழி யினை நாம் பெற்ற பேறென்னே! இத்தமிழ் நமக் குக் கொடுக்காதன ஏதேனுமுண்டோ? ஆயினும், இதுபோழ்து நாம் வளங்குன்றியிருப்பது துன்பத் திற்கிடமாயிருக்கிறது. இதற்குப் பிறப்பென்னை? நமது புறக்கணிப்பே பலவித இடுக்கண்களைப் பிறப்பித்திருக்கின்றது. நமது அறியாமையான் பிறக்குங் கேடுகள் எத்தன்மைத்தா யிருக்கின் றன, பாருங்கள்!

"தட்டு, கதவு திறக்கப்படும், கேள், அது கொடுக்கப்படும்" என்ற முதுமொழிகளை, ஜீவன் முத்தராகிய இயேசுநாதரால் கிடைக்கப் பெற் ரோம். அதுபோல, நாம், நந்தாய் மொழியைத் தட்டிக் கேட்டால், நமக்கு எல்லா நலன்களும் வழங்கப்படும்.

இனி, தமிழில் பல நூல்கள் தற்காலத் தேவைக்குகந்தவாறு வெளியிட கருத்துக் கொண்டுள்ளோம். தமிழ்ப் பல்கலைக் கழகம் அவசியம் ஏற்படுத்த கிளர்ச்சி செய்தலும் தமிழரின் கடமையாதலமையும். அதற்கேற்ப, பலதிறப்பட்டவைகளை மக்கள் எளிதிலடையுமாறு "தமிழ்ப் பல்கலைக் கழகப் பதிப்பு நிலைய"த்தின் வாயிலாக உலகோர்க்கிய முன் வருகிறோம். அன்பர்கள் நம்முடைய நந்நோக்கங்களை யீடேறத் துணை செய்வார்களென வேண்டுகின்றோம்.

ஜே. என். இராமநாதன்,


தலைவர்,

தமிழ்ப்பல்கலைக் கழகப் பதிப்பு நிலையம்.

10, வெங்கடாசல நாயக்கன் தெரு,

கோமளேசுவரன்பேட்டை,

மார்கழி, 1922. மலைச்சாலை, சென்னை.



ஜே. என். இராமநாதன்.

# சொல்வது ஒன்று
# செய்வது வேறு

## பெண் கல்வி

### 1

பெண் கல்வி இன்றியமையாதென்று பலர் பலவிடங்களிற் பேசியுள்ளார்கள். ஏராளமாய் ஆர்வத்தையுங் காட்டியுள்ளார். பல கட்டுரைகளும் எழுதப்பட்டிருக்கின்றன. ஆயினும் நடவடிக்கையில் பெண் கல்விப் பெருக்கத்தைக் காண்கிலேன்.

சிலர் தங்கள் புதல்விகளைப் பள்ளிக்கூடங்களுக்கு அனுப்பிக் கற்றுவரும்படி செய்கிறார்கள். ஆயினும் இவர்கள் கற்பது யாது? சிறிது தமிழும், பெரிது ஆங்கிலமும் கற்றுவருகின்றனர். அச்சிறிய தமிழோ சரிவரப் பேசக்கூடப் பயிற்சியைக் கொடாமலிருக்கிறது. எழுத்தறியா மாக்கள் பேசுவது போல்தான் சிறிது தமிழ்ப் பயின்

ரேரும் பேசுகின்றனர். ஆகையால், சிறிது தமிழ்ப் பயின்றதனுல் பயன் ஒன்றுமில்லாமலிருக் கிறது. அதனுல் சிறிது தமிழ்ப்பயின்ற ஒருவ ரைக் காட்டிலும் எழுத்தறியா மாக்களே சிறந் தோரெனக் கருதுதல் நலமே.

நந் தீந்தமிழைப் புறக்கணித்து நம் பெண்மக்க ளுக்கு ஆங்கிலத்தையே பயிலும்படி தாய் தந்தை யர்கள் செய்கின்றுர்கள். இது தகுதியோ?

நமது நாட்டில் பிழைக்கவரும் புறநாட்டார் கள் நமது நாட்டு பழக்க வழக்கங்களேயும், மொழி களேயும், நூல்களேயும், இன்றியமையாது வேண்டு மெனக் கற்கின்றுர்கள். அன்றியும் நமது நாட்டில் அரசியல் நடவடிக்கைகள் நிகழும் எல்லா விடங் களிலும் தமிழ் மொழியிலேதான் எல்லாம் நடை பெறுகின்றன. அப்படியிருக்க, நமது பெண்மக் களுக்குத் தமிழைப் பயில்விக்காமல் ஆங்கிலத் தையே பயிலச்செய்து இன்டர்மீடியட், பீ. ஏ. முதலிய உயர்தரக் கல்வியைப் பெறும்படி செய் வதே பெண் கல்விப் பெருக்கமெனக் கருது வாரைப் புகழுவாவது பேசவாவது இடமில்லே. அது தகுதியுமாகாது. இங்கிலாந்து நாட்டில் பெண்கள் ஆங்கிலத்தைப் பயிலாது, ஜர்மன் அல் லது ரஷியன் அல்லது ஜப்பானீஸ் மொழியைப் பயின்று வல்லுனராயின் அதைப் பெண் கல்விப்

பெருக்கமெனச் சொல்லுவார் உளராவரோ? அதைப் பார்த்து நினைக்குங்கால் தற்காலம், நமது நாட்டில் பெண் கல்வியே கிடையாதென்று சொல்லவேண்டும்.

நமது பெண்மக்கள் தமிழையும், தமிழ் நூல்களையும், தமிழர் பழக்க வழங்கங்களையும், தமிழர் குடும்பத்திற்கானவைகளையும் ஒரு சிறிதும் உணர்ந்திலர். தமிழரின் நிலையும், தமிழின் நிலையும் இவ்வாறிருப்பது வருத்தத்திற்கு இடமாயிருக்கிறது.

இப்படியிருப்பதற்குக் காரணம் நமது நாட்டிற்கும், நமது பெண்மக்களுக்கும் ஏற்றவாறு கல்வித் துறையை அமைக்காமலிருப்பதே. இப்பொழுதோ பெருமைசால் மந்திரியார் பொதுமக்களின் பொறுப்புள்ளவரா யிருக்கின்றனர். அன்னார் தம் கருத்துக்களையும் நோக்கங்களையும் பலவிடங்களில் வெளியிட்டிருக்கிறார். அந்த நோக்கங்களை நிறைவேற்றப் போதிய பணமில்லையென்றும் உடனே தெரிவித்து விடுகிறார்கள்.

ஆகையால் விளையும் பயன் ஒன்றும் புலப்படாமலிருக்கிறது. அப்படி யிருத்தல் பொருத்தமுடைத்தாகாது. உள்ள பணத்தைக்கொண்டே கல்வித் துறையைச் சீர்திருத்தி, நமது நாட்டிற்குப் பலன் கொடுக்கும்படி பெண்கள் கல்வியைப்

பெருக்கி, நமது பெண்மக்களை ஒப்பற்ற தாய்மார் களாக்கவேண்டும். இன்றேல், நமது நாடு ஒரு போதும் முன்னேற்றமடையாது. பல வாண்டுகள் கழிந்தாலும், பல மந்திரிமார்கள் வந்து சென்றா லும், ஏராளமாய் வரிவிதித்து வருவாயைக் கொழுக் கச் செய்தாலும், இப்பொழுதிருக்கும் நிலைமை யில் பெண் கல்வியை விட்டிருப்பின், நமக்கும், நமது நாட்டிற்கும் யாதொரு நன்மையும் உண்டா காது. மற்ற எல்லா விஷயங்களைக் காட்டிலும் பெண் கல்வியே நாட்டை முந்துறச் செய்வதாகும்.

கடந்த கடும்போர் நடந்தகாலை இங்கிலாந்தி லுள்ள பெண்கள் பலவேறு துறைகளில் நாட் டிற்குப் பயன் விளைவித்தார்களல்லவோ? வெடி குண்டுகள் செய்வதிலும், தின்பண்டங்களாக்கு வதிலும், போலீஸ் உத்தியோகஞ் செய்து அமைதி யைக் காத்தலிலும், தந்திச் சாலைகளிலும் புகை வண்டி நிலயங்களிலும் வேலை பார்ப்பதிலும், பிணி யாளர்களையும், அடி, வெட்டு முதலியவைகளால் ஊனம், புண் முதலியன பெற்றார்களையும் பத முறச் செய்வதிலும் நாட்டிற்கு உதவி புரிந்தார்க ளல்லவா? இவ்விதமான துறைகளில் நமது தமிழ் மகளிர்கள் இம்மாகாணத்தில் பயிற்சி பெற்றிருக் கிறார்களா? இத்தகைய துறைகளில் பயில்விக்க இடங்களுங் கிடையாதே.

மகளிர்களுக்கான தொழில்களைச் சிறிது ஈண்டு வரைகிறேன். சுருக்கெழுத்தில் வரைதல் (ஷார்ட்ஹாண்ட்), அச்சு அடித்தல் (டைபிங்), வரவு செலவு கணக்கு வைத்தல் (புக்கீபிங்), வர்த்தகக் கடித மெழுதுதல் (கம்மர்ஷியல் கரஸ்பாண்டென்ஸ்), காக்கும் நிதித்தொழில்(இன்ஷூரன்ஸ்), கொடுக்கல் வாங்கல் வேலை (பாங்கிங்), தந்தியடித்தல் (டெலிகிராபி), பத்திராசிரியர் வேலை (எடிட்டர்), தொழிற்சாலைகள் நடத்துதல் (மானேஜர்), விற்பனைக்காரர்கள் (சேல்ஸ்வுமன்), தையல் (டெய்லரிங்), பின்னல் (நிட்டிங்), சரிகை செய்தலும், அழகான ஓரங்கள் பின்னுதலும், (லேஸ்மேகிங்), பலவித குமாஸ்தா வேலை (கிளெரிகல் வர்க்), மருத்துவம் (லேடி டாக்டர்ஸ்), உபாத்திமார்கள் (டீச்சிங்), பலவித சட்டி பானைகள் செய்தல் (பாட்டரி), கண்ணாடி செய்தல் (கிளாஸ்மேகிங்), பழங்கள், காய்கள் முதலியன ஊறுகாயிடுதல் (புரூட் பிரஸர்விங்), தின்பண்டங்கள் செய்தல் (பேகரி, பிஸ்குய்ட் மேகிங்), துணிகள் சலவை செய்தல் (லாண்ட்ரி), செருப்பு முதலிய சாமான்கள் தோலினால் செய்தல் (லெதர்ஒர்க்ஸ்), சோப்புகள் செய்தல் (சோப்மேகிங்) மெழுகுவர்த்தி செய்தல் (காண்டில் மேகிங்) அச்சு வேலை, புத்தகங்கள் கட்டுதல். (பிரிண்டிங், பைண்டிங்), சிறுவர்களுக்

கான விளையாட்டுப் பொருள்கள் செய்தல் (டாய் மேகிங்) முதலிய பல பயனுள்ள தொழில்களில் பெண்கள் இன்றியமையாது பயிற்றுவிக்கப்பட வேண்டும்.

---

## பெண் கல்வி

## 2

பலவிதக் கைத்தொழிலைப்பற்றிய நூல்கள் ஆங்கில மொழியிற்றான் இருக்கின்றன. தமிழ் மொழியில் அவைகளைப்பற்றி நூல்களில்லாதது தமிழுக்கும், தமிழர்களுக்கும் பெருங் குறையே! இனி பலகைத்தொழில், வானசாத்திரம், மருத்துவம் முதலிய நவீன நூல்கள் தமிழில் இயற்றப்படுமென நினைக்கின்றேன். இது முக்கியமான வேலையென எல்லாரும் அறியவேண்டியது. இதற்குப் பலரும் உதவிபுரிய வேண்டிக்கொள்கிறேன். இது நிற்க.

பல அரிய நூல்கள் ஆங்கிலத்திலிருப்பதால் ஆங்கிலப் பயிற்சி அவசியமென்றே சொல்லுகிறேன். ஆங்கிலம் முற்றிலும் வேண்டாமென்று நான் கூற முன்வரவில்லை. ஆனால் ஆங்கிலத்தில் அதிக தேர்ச்சி அவசியமில்லையென்பது என்

கருத்து. ஆங்கில நூல்களைப் படிக்கவும், அவைகளின் கருத்துக்களை அறியக்கூடிய ஆற்றலும் நமக்கிருந்தால் போதும். தமிழில் மாத்திரம் ஆழமான அறிவு வேண்டும். இப்பொழுது இருக்கும் தமிழின் நிலையும், ஆங்கிலத்தின் நிலையும் மாற்றப்படல் வேண்டும். இந்த அபிப்பிராயத்தை எவ்வித அரசியல் கட்சியினரும் ஒப்புக் கொள்வர் என்பது எனது துணிபு. நாட்டுக் கல்வி அல்லது தேசியக் கல்வியின் முதன் முதலாய அம்சமும் இதுவேயாகும். தேசியக் கல்வியின் மற்ற அம்சங்களைப் பற்றிக் கூறுவதற் கிஃது இடமில்லை.

ஈண்டு ஒன்று குறிப்பிட வேண்டியிருக்கிறது.

"எப்பொருள் எத்தன்மைத்தாயினும்
அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு"

என்றார் திருவள்ளுவர். ஆங்கிலமும், ஆங்கிலேயரும் நமது நாட்டிற்கு வந்திலரேல் நமது கதியும், நிலையும் பரிதபிக்கக் கூடியதாயிருக்கும். தமிழரின் நாகரிகமும், கோக்கங்களும் இடந் தெரியாமற் போயிருக்கும். ஆரியர்களால் நமது பெருமை யெல்லாம் மறைக்கப்பட்டன. நமது நூல்களையும் நாசமாக்கி மாற்றியுந் திருத்தியும் விட்டார்கள். நமது சுதந்தரங்களையும் நசுக்கி விட்டார்கள். நமது பெண்களின் நிலைமையும்

மிருகத்தினுடையதாக்கி விட்டார்கள். ஆரியர்களில் முற்காலத்தில் கற்றிருந்த மெல்லியலார் யாரேனும் இருந்தனரோ? பக்த சிரோமணிகளில் பெண் பாலருண்டோ? கிடையாது. ஆகையால் ஆரியரின் நாகரிகத்தில் பெண்மக்களுக்குப் போதிய சுய சுதந்தரங் கிடையாது. ஆரியர்கள் தமிழ் நாட்டை வசப்படுத்தியதனுல் தமிழ்ப் பெண்மக்களும் சுதந்தரத்தைத் துறந்தவர்களானூர்கள். ஆயினும் தமிழர்களின் ஆற்றலானது எவ்வாற்றானும் நசுக்கப்பட முடியாது. ஆகையாற்றான் நல்லிசைப்புலமை மெல்லியலார்கள் தமிழரில் பலரிருந்தார்கள். காரைக்காலம்மையார், ஔவையார், பாரிமகளிர், வெள்ளி வீதியார், பூதப்பாண்டியன் தேவி, குறமகள் இளவெயினி, பேய்மகள் இளவெயினி, மணிமேகலை முதலிய பலர் தமிழில் வல்லுனரா யிருந்தார்களல்லவோ?

இப்பொழுது ஆங்கில அரசு இருப்பதனுற்றான் நமது பெண்களும் ஆரியச் சூழ்ச்சிக்குட்படாது மீறி பல சுதந்திரங்களை யனுபவித்து வருகின்றனர். ஆகையால் ஆங்கிலம் அவசியமென்பது தானே விளங்கும். அன்றியும் ஜாதி, வகுப்பு முதலிய வேறுபாடுகள் தமிழில் கிடையாது. ஆங்கிலத்திலுங் கிடையாது, ஆரியத்தில் எல்லாம் முரண்பட்டதாகவே இருக்கின்றன. ஆரியம் தமி

மைக் கெடுக்க எண்ணினாலும், ஆங்கிலத்தின் உதவி யிருப்பதால், தமிழர்கள் தலை தூக்கி நிற்கின்றனர்.

ஆகையால் பெண் கல்விப் பெருக்கத்திற்கு ! ஆங்கிலம் பெருந்துணையாக விருக்கிறது. ஆயினும் ஆங்கிலத்தைத் தமிழுக்குத் துணையாக வைத்துக் கொள்ள வேண்டுமே யொழிய, தமிழைத் தள்ளி விட்டு ஆங்கிலத்தையே சிறப்பாகக் கொள்ளக் கூடாதென்பது என் கருத்து.

பெண்மக்கள் எவ்வளவு உன்னத பதவியை விரும்பி, அவ்விருப்பத்தின்படி நடக்க இயன்ற போதிலும், சிறு குழந்தைகளைப் பேணுந்தொழில் பெண் மக்களுத்தானே இயற்கையான் வந்து சேருகிறது. ! அக்குழந்தைகளிடத்தில் தாய்மார்கள் ஆங்கிலத்தில் தாலாட்டவாவது, பேசவாவது, மதிபோதிக்கவாவது இயலாது; தமிழிற்றான் இயலும். ஆகையாலும், தமிழில் நமது பெண் மக்கள் ஆன்ற அறிவு வாய்ந்திருத்தலே பொருத்தமுடைத்தாம். அதற்கேற்ப பெண் கல்வியுமமைதல் நலத்தினும் நலனாம்.

தற்காலத்தில் சில செல்வர்கள் தாதிகளை வைத்துக்கொண்டு குழந்தைகளை வளர்த்து வருகிறார்கள். எப்படியிருந்தாலும் அத்தாதிக்கும் கல்வி

வேண்டியது தானே. ஆகையால் கருத்து வேறு பாடு ஒன்றுமில்லை.

ஆங்கிலத்திலேயே எல்லாம் நமது வீட்டில் நடத்திக் கொண்டால் என்ன? என்று கூறுவாருமுளர். நூற்றைம்பது வருடகாலமாக ஆங்கிலேயர்களோடு பழகியும் நமது நாட்டில் நூற்றுக்கு ஐந்துஅல்லது ஆறு பேர்களுக்குத் தான் ஆங்கிலந் தெரியும். அப்படியிருக்க எல்லாரும் ஆங்கிலங் கற்றுணர்ந்து தாய்மொழி யாக்குதல் சாத்தியமா? சாத்தியமே யல்ல. அப்படிச் சாத்தியமானாலும் அது நமக்குத் தேவையா? தேவையுமல்ல. அப்படி ஆங்கிலத்தை இனி நாம் தாய்மொழி யாக்கின் அது தேசத்துரோகம் ஆகுமேயல்லாது வேறல்ல. இவ்வித மதிகேட்டிற்கு ஒருவரும் இடங்கொடுக்கத் தயாரா யில்லையென்பது உண்மை.

---

## பெண் கல்வி

## 3

எந்நாட்டிற்கும், எக்கல்விக்கும் அடிப்படையாய் ஆதாரவும் ஆர்வமும் அளிப்பது அந்நாட்டின் தாய் மொழியேயாகும். பெண்கல்வி என்றதைப்பற்றிக் கூறவேணுமெனினும், பொதுவாகக் கல்வியின் உட்

 180864

டுரைகளை யாராயாமலிருக்கக் கூடவில்லை. ஆகை யான் சென்ற இரண்டு கட்டுரைகளில் நந் தாய் மொழியாகிய தமிழைப்பற்றிப் பெரிதும் விவரிக்க வேண்டியதாயிற்று.

சரித்திரத்திற் காணும் ஒருண்மையைக் குறிப்பிட்ட பின்னர், மற்றைய நுண் பொருள்களை எழுதுவேன். இங்கிலாந்து தேசம் ஒருகாலம் நார்மன்ஸ் என்பவர்களால் ஆளப்பட்டு வந்தது. அந்தக் காலத்தில், இங்கிலாந்து தேசத்தில் அரசாங்க பாஷை பிரெஞ்சு பாஷையாக விருந்தது. தங்கள் தாய் மொழியாகிய இங்கிலீஷ் பாஷையை நியாயஸ்தலங்களிலும், உத்தியோகசாலைகளிலும் வழங்குவதில்லை. அதுசமயம் இங்கிலாந்து தேசம், ஏனைய நாடுகளைக் காட்டிலும் பின்னடைந்திருந்தது. பிறகு உவில்லியம் அரசராய் இங்கிலாந்திற்கு வந்தமைந்த பின்னர், பிரெஞ்சு பாஷை அகற்றப்பட்டு, ஆங்கில மொழியே மன்னர்க்கும் மன்னுயிர்க்கும் ஏற்றதாக்கப்பட்டது. அதன்பின்னர்தான் இங்கிலாந்து நாடு செல்வத்திலும், நாகரிகத்திலும், தேச பக்தியிலும் சிரோங்கிற்று. இவ்வுண்மையை எல்லோரும் உணர்ந்திருந்தும் அவர்கள் சொல்வது ஒன்றாகவும், செய்வது வேறாகவும் இருப்பது வருந்தற்பாலதாம். ஜப்பான் நாடும், எல்லாக் கல்வியையும், தம்முடைய தாய்

மொழியிற் பயிற்றுவித்து வருவதனாலல்லவோ, இன்று ஜப்பான், உலகினிலுள்ள எல்லா அரசுகளைக் காட்டிலும் மிக உயர்ந்த ஒப்பற்ற நிலையிலிருக்கிறது. இது நிற்க.

பெண்கல்விக்காக உயிர் விடுவதாக எத்தனை ஆசார சீர்திருத்தக்காரர்களும், ஆண்மக்களும் ஆரவாரஞ்செய்கின்றார்கள். இஃதெவ்வளவு தூரம் சத்தியமென்பது விளங்க அதிக சிரமம் எடுத்துக் கொள்ள வேண்டியதில்லை. பெண்கல்வி அவசியமெனக் கூறுகிறவர்களின் தங்கைமார்கள், தமக்கைமார்கள் முதலிய உற்றார் உறவினர் எத்தனையோ பேர்களிருக்கிறார்கள். அத்தங்கைமார்களையும் தமக்கைமார்களையும் ஏன் பெண்கல்விப் பயனையடையும்படிச் செய்யலாகாது? பலர் தங்கள் சகோதரிகளைப் படிக்க விடுவதில்லை. அப்படி தங்கைமார்களையும் தமக்கைமார்களையும் படிக்கச் செய்தாலும் தங்களுடைய இளம்பருவமுள்ள மனைவிகளைப் படிக்க விடுவதில்லை. தங்கையாவது தமக்கையாவது படிக்கலாம். ஆனால் தன் மனைவி படிக்கப்படாதாம். ஏன்? பெண்கள் கல்வியைப் பெற்றுக் கொண்டால், கெட்டுவிடுவார்களென்ற குருட்டு நம்பிக்கை ஆண்மக்களிடத்திலின்னும் இருக்கிறதே! இது என்ன மௌடீகம்! தங்கை கெட்டாலும் பாதகமில்லை. தன் மனைவி கெடக்கூடா

தாம். இது என்ன சுயநலம்! இது மிருகத்தன்மைக்கும் கீழ்ப்பட்டதாகவே கூற வேண்டும். கல்வியினால் பெண்கள் கெடுவதானால் தங்கையானாலும் சரி, மனைவியானாலும் சரி, ஒருவரும் கற்கவே கூடாது. இக்கொள்கையை ஈண்டு ஒரு பொருட்படுத்த இடமேயில்லை. பெண் கல்வி கூடாதென்று கூறுங்காலம் தமிழ் நாட்டில் முன்புங் கிடையாது. இன்றுங் கிடையாது; இனிமேலுங் கிடையாது. இங்கு முதலில் எடுத்துக்கொண்ட கொள்கைக்கு முற்றும் முரண்பட்டிருத்தலால் பெண் கல்வி கூடாதென்பதைப்பற்றிச் சட்டை செய்ய வேண்டியதில்லை.

கல்வியால் பெண்கள் கெடுவதென்றால், ஆண்கள் கெடமாட்டார்களா என்ற கேள்விக்குப் பதில் என்னே கூறுவது? கல்வியினால் பெண்கள் வழி தப்பினார்களென்று யாரேனும் கணக்கு ஒப்புவித்தால், அதைக் காட்டிலும் பன்மடங்கு ஆண்மக்களும் கல்விப் பயனால் அழிந்தார்களென நிர்ணயிக்கப் போதிய ஆதாரமும் கையிலேயே இருக்கிறது. ஆகையினால் கல்வியினால் கேடுவிளையுமென்ற கருத்தைப் பிறப்பித்தவர்களாகிறோமல்லவா? அப்படியாயின் பெண்பாலார்க்கும் ஆண்பாலார்க்கும் கல்வி தருதல் கூடாதெனப் பெறப்படுகிறதல்லவா? இங்ஙனம் முடிவையடைதல் உலக உண்மைக்கு உகந்த

தாகுமா? ஆனபடியால், கல்வியால் மகளிர்கள் நெறி தவறுகிறார்களென்பது முற்றிலும் ஒவ்வாத தாகும். இந்த மாதிரியான குருட்டு நம்பிக்கை ஆண்மக்களிடத்திற் காணப்படுகின்றதேயல்லாது, பெண் பாலரிடத்தில் காண்கிலேன். ஆதலினால் பெண் கல்விக்கு விரோதமா யிருப்பவர் புருடர் களேயாவர். இதை நோக்கின் சொல்வதொன்றும் செய்வது வேறாகவும் விளங்குகின்றனவல்லவா?

இன்னுமொன்று இன்றியமையாது விளக்க வேண்டி யிருக்கிறது. பெண் கல்வி நன்மையெனக் கருதி மகளிர்களைப் படிக்க வைத்துத் தேர்ச்சி பெறச் செய்கிறோம். அப்படித் தேர்ந்த மெல் லியலார்களின் குடும்பத்தில் பல இடுக்கண்கள் நிகழ்கின்றனவே! ஒழுக்கத்தினா லேற்படும் இடுக் கண்களல்ல. கற்ற பெண்ணின் அறிவின் நிலைக் கும், நாகரிகத்தின் நிலைக்கும் தக்கபடி கணவர்கள் அமைவது முயற்கோடாக விருக்கிறதே. அன்றி யும் ஜாதிக் கட்டுப்பாடுகளினால், ஒரே ஜாதியில் கலியாணம் முடிக்க வேண்டுமென்ற நீங்கா நோயும் நமது நாட்டிலிருக்கிறது. ஒரே ஜாதியில் படித்த மாப்பிள்ளை யில்லாமல் எத்தனையோ கற்றுணர்ந்த நங்கைமார்கள் இடர்ப்படுகின்றனர். வேறு ஜாதி களில் தகுந்த மணவாளர்கள் கிடைப்பதாயிருந் தால், நமது நாட்டில் ஏற்பட்டிருக்கும் ஆரியச்

சட்டம் இடந்தாரேன் என்கிறது. அன்றியும் நம்மவர்கள் ஜாதிச் சேற்றிலுழன்று கொண்டிருப்பதனால், கலப்பு விவாகம் நடைபெற இடமுமில்லாம விருக்கிறது. சரி, ஜாதிக் கட்டை மீறத் துணிகிறேன். சட்டத்தைத் தன் வயமாக வளைத்துக்கொள்ளுகிறேன். பலகலைப்பயின்ற ஆண்மகன் ஒருவன் என்னை மணந்து கொள்ளட்டுமென்று சத்தியத்திற் கஞ்சி முன்வரினும், அக்கற்றறி மோழை மாசறக் கற்ற மடந்தையை மணக்க இசைவரோ என்ற ஐயம் இருந்து கொண்டிருக்கிறது. ஈது என்ன கொடுமை? இங்கிலாந்திற்குச் சென்று, ஆங்கு பல திருவிளையாடல்களாடி, பாரிஸ்டர் பரிக்ஷையோ அல்லது டாக்டர் பரிக்ஷையோ தேறி வந்த நிபுணர்களே, இந்தியாவில், நமது நாட்டிலேயே, தாய் தந்தையர்களுக்கடங்கி, வீடுங் குடும்பமாய் வாழ்ந்துகொண்டு ஒழுங்காக, நீதி தவறாத பல்கலை யுணர்ந்த பாவையை கடிமணம் புரிய கடுகடுத்தால், என் கூறுவது? என் செய்வது? புறநாட்டு நாகரிகம், அவ்வாண் மக்களைச் சீர்திருத்தவில்லையே! அவ்வாண்மக்களால் புறநாட்டு நாகரிகத்திற்குக் குறைவு ஏற்பட்டுவிட்டதேயன்றி வேறல்ல. இந்த ஆபத்து ஆண்மக்களால் உண்டாயிருக்கிறது. பெண்களுக்கு ஆண்களே கூற்றுவராக விருக்கின்றனர். இதைச் சீர்

16 சொல்வது ஒன்று செய்வது வேறு

திருத்துவது முதன் முதலாய கடமையாகும். பெண் கல்வியின் இத்துறையால் பலர் நெஞ்சத்தில் நெக்குருகி நெக்குருகி வருந்துகின்றனர். ஆயினும் தங்கள் துன்பத்தை வெளியிடாதிருந்து வருகின்றனர். இதை ஈண்டு யான் வெளியிடுகிறேன். எத்தனை காலம், மனதிற்குள்ளாகவே புழுங்கிக் கொண்டிருக்கிறது, என்றைக்காவது ஒருநாள் வெளிப்பட வேண்டுமே. இக்குறையை நீக்கவும் வேண்டுமல்லவா? கற்ற பெண்களெல்லாம் கன்னி மாடங்களில் வாழ்வதா? ஆகையான் நமது நாட்டின் முன்னேற்றத்தைக் கோரிய ஆண் பெண் இருபாலாரும் இக்குருட்டுத் தனத்தை நீக்க முயற்சிப்பார்களாக. இக்குருட்டுத்தனத்தை நீக்காவிடில் பெண் கல்வி பெருக்கத்திற்கு இடமேயில்லை. பெண்கல்வி, வேண்டும், வேண்டும், என்று பிதற்றுபவர்கள் கள்வர்களாவார்கள். ஈதுண்மை. சொல்வது ஒன்றும் செய்வது வேறும் ஆகின்றன.

அன்பர்களே! தங்கைமார்களே! நங்கைமார்களே! அண்ணன் தம்பிமார்களே! ஈண்டுக் குறிப்பிட்டிருக்குந் துறையில் சீர்திருத்தம் உடனே செய்யத் துவங்காவிட்டால், நாமும், நமது நாடும், சடுதியில் மாண்டு போகும்.

அரசியற் சுகம், உற்றார் உறவினரின்பம், இம்மை மறுமைப் பயன்கள் முதலியவைகளைப் பெறத் தகுதி யற்றவர்களாகாதீர்கள்.

---

## பெண் கல்வி

## 4

"உள்ளதைச் சொன்னால் நொள்ளைக் கண்ணனுக்குக் கோபம்" என்ற பழமொழி ஒன்று இருக்கின்றது. யதார்த்தத்தைக் கூறின் வெகு ஜனங்களின் விரோதம் சம்பவிக்கின்றது. இருந்த போதிலும், உண்மையைக் கூறுவதுதான் நியாயம். ஈண்டுச் சில வாய்மைகளைக் குறிப்பிடுகிறேன். நமது சகோதரிகள் கோபங் கொள்ளாமல் சாரத்தைக் கைக்கொள்ள வேண்டுகின்றேன்.

பெண் கல்வியின் அமைப்பில் பல விஷயங்களைக் குறித்த பாடங்களுண்டு. ஆனால் மக்களுக்கு முக்கியமாய் வேண்டியதான சுகாதாரம், குழந்தைகளைப் பெறுதல், குழந்தைகளைப் பேணுதல் முதலிய விஷயங்களைக் குறித்த பாடங்கள் இந்தியக் கலாசாலைகளில் எல்லாருக்கும் கற்றுக் கொடுப்பதில்லை. இப்பாடங்கள் ஆண்மக்களுக்கும் பெண் மக்களுக்கும், கட்டாயப் படிப்பாகப்

போதிக்கப்பட வேண்டுமென்பது என் கருத்து. இங்கிலாந்து தேசத்தில் சுகாதாரம் கட்டாயப் படிப்பாக எல்லாருக்கும் போதிக்கப்பட்டு வருகிறது. சுகாதார விஷயங்களையும், சுகாதாரக் கல்வியையுங் கவனிக்கப் பிரத்தியேகமாய் கனம் பிஷர் என்ற மந்திரியும் அமைந்திருக்கின்றனர்.

சுகாதாரம், பிரசவம், குழந்தைகளை வளர்த்தல் முதலியன அறியாமையால் நமது தாய்மார்கள் பல்லாயிரங் குழந்தைகளைச் சாகவிடுகிறார்கள். சிசு மரணத்தின் கணக்கையும், காரணத்தையும் காணும்போது மலடி கூட வருந்துவளென்பது நிச்சயம். இப்போது கவர்ன்மெண்டாரும், தேசாபிமானிகளும் "மடர்னிடி அண்ட் சைல்ட் வெல்பேர் இன்ஸ்டிடியூட்" என்ற கருப்பிணிகளையும் குழவிகளையும் பாதுகாக்கும் சங்கம் ஏற்படுத்தியிருக்கிறார்கள். இச்சங்கம் எவ்வளவு காலம் வாழ்ந்திருந்தாலும், எல்லா மாதர்களுக்கும் பயனளிக்க இயலாது. ஆகையால் கல்வித் துறையில், சுகாதாரம், பிரசவம் முதலியவைகளைக் கட்டாயப் படிப்பாகச் செய்து விட்டால் எல்லா மாதர்களும் அவ்விஷயங்களில் அறிவு பெற்றுத் தாங்களே சுகமடையக் கூடும். கல்வித் துறையிலமர்ந்துள்ள கனம் மந்திரியவர்களும், சுகாதாரம், மருத்துவம் முதலிய துறைகளிலமர்ந்துள்ள கனம் மந்திரியவர்

களும் இதனைக் குறித்துக் கலந்து பேசி இன்னும் பதினெட்டு மாதங்களுக்குள் ஒரு முடிவு செய்ய வற்புறுத்துகிறேன். நமது சர்வகலாசாலைப் பிரதிநிதியாரும் இதனை உடனே கவனிக்குமாறும் வலியுறுத்துகிறேன்.

பிரபஞ்ச உற்பத்திக்கும், உயிர் நிலைத்தற்கும் அத்தியாவசியமான இவ்விஷயத்தில், அந்தோ! எல்லாரும் பராமரிக்கையா யிருக்கின்றனர். இந்த அசட்டைத் தனத்தால் எத்துணைக் கேடு விளைவதென அறிகிலர். கருதரிக்கும் காலத்தில் சுகமான தேகஸ்திதிகள் இருக்கவேண்டும். இல்லாவிட்டால் பிணியே உருவாக் கொண்ட குழந்தைகள் பிறக்கின்றன. அப்பிணிகள் இக்குழந்தைகள் இறந்தாலன்றித் தீரா. கருதரிக்கும்போது நல்லெண்ணங்களு மிருத்தல் அவசியம். இல்லாவிடில், தீக்குணமுற்ற பிள்ளைகள் பிறக்கின்றன. அன்றியும் அக்காலத்தில் நல்ல உணவுகளை உட்கொண்டிருக்க வேண்டும். அச்சமயம் சாராயம் முதலியன குடித்து வெறி கொண்டிருந்தால் குடிகாரப்பிள்ளைகள் பிறக்கின்றன. அதே மாதிரியாகக் குழந்தை வயிற்றிலிருக்கும் 10-மாத காலத்திலும் நல்ல ஒழுங்கைக் கொண்டிருத்தலவசியம். அப்போது நல்ல எண்ணங்களும் மனக்கிளர்ச்சியுமிருத்த லமையும். அக்காலம் நல்ல வஸ்துக்களை

யும் ஆகாரமாகக் கொள்ளல் வேண்டும். இல்லாவிடில் கரு சிதையும், அல்லது பிணியுள்ள, அல்லது தீக்குணமுள்ள புதல்வர்கள் தோன்றுவர். மக்களைப்பெற்ற பின்னர் தாய்மார் அதிக ஜாக்கிரதையாயிருத்தல் இன்றியமையாதது. குடல் சரிதல், அதிக இரத்தம் ஓடுதல், விஷந் தாங்குதல் முதலிய தீரா இடுக்கண்கள் விளையும். இங்கிலாந்தில் ஒரு மாது தன்னுடைய ஆறு மாதக் குழந்தை யழும்போது சூப்பும், கறியும், பழமும் ரொட்டியும் அக்குழந்தைக்கு வேண்டியதெல்லாம் கொடுத்தாளாம். அக்குழந்தை சடுதியில் இறந்து விட்டதே என்று பரிதபித்தாளாம். இவ்வித அறியாமை நம்மாதர்களில் கணக்கற்றவர்களிடத்திலிருக்கிறது. வீட்டு வாசலில் காற்று படும்படி குழந்தைகளின் உடம்பிற்கு ஊற்றினால், அக்குழந்தைகள் கரப்பான் முதலிய நோய்களுற்று இழுப்பு கண்டு மரிக்கின்றன. இவ்வித அறியாமையாற் பெருகுந் தீங்குகள் எழுத எழுத எட்டிலடங்கா. ஆகையால், இவ்விஷயங்களைக் கட்டாயப் படிப்பாக்க வேண்டும். இதனை அசட்டை செய்தல் பெரும் பாபமாகும்.

எத்தொழிலையும் பெண் மக்களிடத்திலிருந்து ஆண்மக்கள் பால் மாற்றிவிடலாம். ஆனால் மகவின்றலை மாற்ற முடியாது. உலகத்திற்குத் தாய்

மார்களால் உண்டாகும் நன்மை பெருமையும் இத் துணைத்தென்று சொல்லொணுது. தாயின் தத்து வம் எல்லாராலும் போற்றற்பாலதாம். தாய் மொழியென்றும், தாய் நாடென்றும், தாயகம் என் றும், தாயின் அம்சத்தையே போற்றி வத்துகின்ற னர். " அன்னையும் பிதாவும் " என்றதில் " அன்னை " முதன்மையா யிருத்தலாலும், திருக் குறளில் முதற்பாவில் " ஆதி " என்பவள் " பக வன் " என்பவனுக்கு முன் கூறப்படுதலாலும் தாய் என்பவள் எப்படைப்பிலும் மேம்பட்டவ ளென்று பெறப்படுகிறது. கடவுளையே தாய் என்றும், வத்தித் தொழுவது எல்லாருடைய துணிபாம். ஆகையால் அன்னையா யிருத்தலின் மகிமையை யுணர்ந்து உலகத்தைக் காக்கும்படி நமது தாயின் அம்சத்தை வேண்டிக்கொள் கிறேன்.

---

## பெண் கல்வி

## 5

உலகத்தின் வாழ்வில் நாம் எல்லாம் எல்லா விதத்திலும் இன்புற நடந்துகொள்ள அறிவைப் பெறுவதே கல்வியின் உண்மையான பயனுகும்.

## 22 சொல்வது ஒன்று செய்வது வேறு

உலகவாழ்வில் ஆண் பெண் என்ற இரு பாலாரும் ஒருங்கு கூடியே நடந்துகொள்ளுதல் இயல்பாகும். ஆண்களே வாழ முடியாது. பெண்களாகவே தனித்தும் வாழ முடியாது. ஆகையால் இருவரின் ஒற்றுமையாற்றான் இல்லற வாழ்க்கையை நடாத்த முடியும். நல்வாழ்க்கையைத் தருவது கல்வியென்பது ஆன்றோர் துணிபும், நம்மனோர் அனுபவமும் ஆகும். அப்படியிருக்க, இருவருக்கும் கல்வி யவசியமாகிறது. ஆண்பாலார் மாத்திரம் படித்து, பெண்பாலார் கல்லாமல் கல்லாயிருந்தால் சகடம் என்ற இல்வாழ்க்கை நன்றாய்ச் செல்லாது. சகடத்திற் பூட்டிய மாடுகளிரண்டனுள் ஒன்று நொண்டியாயிருந்தால் வண்டி செல்லுமா? கல்லாத ஒருவன் அல்லது ஒருத்தி ஒரு நொண்டிதான். அதோடுமட்டுமல்ல, கல்லாதார் குருடரென்று தெய்வப்புலமை திருவள்ளுவர் திருவாய் மலர்ந்தருளியிருக்கின்றனர். கற்றோர் கண்ணுடையார். கல்லாதவர்கள் புண்ணுடையார். குருட்டு முடமாட்டுடன் எல்லாம்வல்ல வலத்து மாடு பூட்டி ஈர்ப்பினும் வான் சகடம் செல்லவே செல்லாது. ஆனதுபற்றி, பெண்கள் பாடங்கற்று அறிவு பெறுதல் இன்றியமையாத தொன்று.

அன்றியும் ஆண்களைக் காட்டிலும், மெல்லியலார்களுக்குக் கூரிய புத்தி யுண்டென்பது பலர்

அநுபவம். அந்தக் கூரிய இயற்கை யறிவை அபி
விருத்தி செய்யாமலிருப்பதால் கணக்கற்ற பல
பெண்டிர்கள் களிமண்களைப்போல் இருக்கிறார்
கள். ஆண்களின் செயற்கையால் களிமண்களாக்
கப்பட்ட மகளிர்களைக் கண்டு, பொதுவாய், பெண்
களுக்கு அறிவே கிடையாதென்று புருடர்கள்
புகல்வது நகைப்பிற்கிடமாகுமேயன்றி வேறல்ல.
ஏற்றவாறு நம் நங்கைமார்களுக்குக் கல்வியை
யீந்து நலனுறச் செய்யின், பின் ஏதாவது ஒரு
குறை கூற முடியுமா வென யோசித்துப் பாருங்
கள். நண்பர்களே! அதற்கென்ன, அரை குறை
யாய் பயிற்சி பெற்றவர்கள் ஓட்டைப் பானையைப்
போல் வீணர்களாக இருப்பதைக் கண்டு ஒன்று
சொல்ல வேண்டுமோ? "நிறைகுடம் நீர் தழும்ப
வில்" என்றதை ஏன் மக்கள் மறந்து விடுகிறார்
கள்? "சிறு கல்வியால் ஆபத்து நேரிடும்" என்ற
ஆங்கில முது மொழியையுங் கவனியுங்கள்.
ஆதலினாலே சரியானபடி, போதியவளவு, ஏற்ற
கல்வியை, ஆழ்ந்த அறிவும், விசாலமான நோக்கங்
களும் விளையுமாறு நம் பெண்களுக்குப் பயந்தால்
என்ன குறைவு தான் ஏற்படும்? சகல சம்பத்தும்
சர்வ வல்லமையும் இல்லறத்தி லுண்டாகுமென்ப
தற்குச் சந்தேகம் ஒரு சிறிதுமில்லை.

நான் இன்று வரை கண்டதைக் கொண்டு ஒரு உண்மையைக் கூறுகிறேன். எத்தனையோ மகளிர்கள் வைத்தியர்களாகவும், உபாத்தியாயர்களாகவும், ஸ்தல ஆட்சிப் பதவியை யுடையவர்களாகவும், இன்னும் பல கல்வித்துறை போந்த அந்தஸ்தினர்களாகவு மிருக்கின்றனரே. அன்னார்கள், மருத்துவத்தொழிலிலும், ஆசிரியர் வேலையிலும், மற்றவைகளிலும் திருத்தமாகத் தானே பயன் விளைவித்து வருகிறார்கள். இவ்விதமான துறைகளிலுள்ள நூறு பெண்மணிகளில் எத்தனை பெயர்கள் மீது குற்றங்கண்டு பிடிக்க முடியும்? உத்தியோக முறைப்படி அவர்கள் பால் ஒரு குறையுங் கண்டு பிடிக்க இயலாது. ஆண்கள் நூற்றுவரில், பலர் பழுதுபட்டிருக்கின்றனர். இவ்வுண்மைக்கு யார் தான் மறுத்துக்கூற முன் வருவர்?

மாதர்களிடத்து இயற்கையாகவே கூரிய அறிவு அமைந்திருப்பதென பல ஆராய்ச்சி வாயிலான் நிலைநாட்ட முடியும். பிறிதொன்றும் பகர்வேன் காண்மின். கல்வியே ஒரு மாதின் வடிவாயிருத்தலை உணராதார் யார்? நமது நாட்டில் கலைவாணி அல்லது சரஸ்வதி யென்ற பெண் தெய்வந்தானே கல்விக் களஞ்சியம்.

"எதீனி", "மினர்வா" முதலிய ஐரோப்பிய கல்வித் தெய்வங்களும் பெண் வடிவத்துடன்

வணங்கப்பெற்று வருகிறார்களே. இனம் இனத்தைச் சாருமென்பதற்கு ஐயமுண்டோ? வெண்டாமரையாள் பெண்பால் மீது தான் உருக்கத்தைக் காண்பிப்பாள். அதனாற்றான் பெண்களுக்கு அதிவிரைவினில் கல்வி கிட்டுகிறது. அப்படி இயற்கையால் உள்ள நன்மையைக் கெடுப்பது ஆண்களின் மூடச் செய்கையேயாகும்.

உலகத்தில் கெடுதி விளைவது ஆண்களாலே தான். இது கடுமையாகக் காணப்பட்டாலும் அதற்கு என் செய்வது? ஒவ்வொரு ஆண் மகனும் இதனைப்பற்றி நன்றாய் யோசித்துப் பார்க்க வேண்டுகின்றேன். பெண்களே கெடுதி விளைவிக்கிறார்களா? அல்லது கெட்டுப்போகிறார்களா? உள்ளத்தைத் தட்டி எழுப்பி ஒரு விடை பகரக் கேள். ஆ! ஆ! என்ன ஆச்சரியகரமான மறுமொழி கிடைக்கிறது. மனந்திடுக்கிடுகிறது. ஆண் மகன் தன் வீரத்தனங் குன்றி வெட்கி தலையில் முக்காடிட்டு ஓடி ஒளித்துக்கொள்கிறானே. ஆகையால் மாதர்களால் தீங்கு விளையும் என்பது வீண் பழியாகும். மகன் பழியை மற்றவர்மீது சுமத்துவது மகனின் சுயநலச் சுபாவம். ஆண் மகனுடைய மிருக வலிமைக் கஞ்சி மற்றவர்கள் வாய் மூடிக் கொண்டிருக்கிறார்களே ஒழிய வேறில்லை.

“ஆவதும் பெண்ணாலே, அழிவதும் பெண்ணாலே” என்ற மூதுரை பராசக்தியைப் போற்றுகின்றது. இச்சக்தி கல்வியோடு விரவி இயங்குவதுதான் இயல்பு. ஆதலினால் பெண்களுக்குக் கல்வி அவசியம். பெண்களுக்குக் கல்வி தர அதிக பிரயாசை எடுத்துக் கொள்ள வேண்டியதில்லை. அன்னார்களுக்குக் கல்வி கொடுக்கப்படாதபடி தடுக்காமல் பிரயாசை அதிகம் எடுத்துக் கொள்ள வேண்டியதே பெரிய காரியம். ஆண்மக்கள் தடை செய்யாதிருந்து கிருபை செய்தால் போதும். மற்ற நலன்கள் தாமாகவே விளையும்.

இன்னும் அதிகமாகக் கூறின் மிகைபடக் கூறலாகும். ஒன்று மட்டும் விளம்பி நிற்கின்றேன். தற்காலம், அரச நிலையானது பல விதத்தில் மாறிக் கொண்டு வருவது உள்ளங்கை நெல்லிக் கனியாகும். ஆசார சீர்திருத்தங்களும் சுறு சுறுப்பையும் வேகத்தையும் அடைந்திருக்கின்றன. இவ்விஷயங்களை நமது மாதரசிகள் ஆண்களைப் போல ஏராளமாய் உணரவேண்டியிருக்கிறது. இவ்விஷயங்களையும் உலகப் போக்கையும் நமது மெல்லியலார்கள் தெரிந்துகொள்ளாவிடில் ஒரு சீர்திருத்தமும் முற்போக்கும் நிகழாது. ஆண்களோடு பெண்கள் ஒவ்வொரு காரியத்திலும் ஒத்துழைத்தலால் தான் எந்நன்மையும் விளையும். ஆகையால் இவ்

விஷயங்களை எவ்விதம் நம் மடவார்கள் எளிதில் அறிந்து கொள்வது. அதோடுங் கூட நமது தாய் மொழியாகிய தமிழைச் சுத்தமாகப் பேசவும் படிக்கவும் எழுதவும் ஒவ்வொருவரும் வல்லமை பெற வேண்டும். அதிக உயர்ந்த நடைத்தமிழ் உணர்ந்து கொள்ள வேண்டியதில்லையென்று குறுகிய நோக்கமுடையவர்கள் பறையடித்தாலும் பிழையின்றி நல்ல தமிழ்ப் பேச, படிக்க, வரைய கற்றுக்கொள்வது அவசியத்திலும் அவசியமே. இதற்கென்ன சுலபமான வழியிருக்கிறது?

நமது நாடு தமிழ்நாடு. அந்நாட்டில் ஏறக்குறைய மூன்று கோடி தமிழர்களிருக்கின்றனர். இவர்களுள் சிலர் தமிழர்களல்லவென ஓலமிடுகின்றனர். அவர்கள் நீங்க ஏறக்குறைய இரண்டரை கோடித் தமிழர்களிருக்கின்றனர். இவர்களுக்காக பல நாட் பதிப்புகளும், வாரப் பதிப்புகளும், மாதந்தரப் பத்திரிகைகளும் இருக்கின்றன. நமது நங்கைமார்கள் எப்படியாவது, ஏதாவது ஒரு நல்ல தமிழ்ப்பத்திரிகையை வாங்கி வாசித்தலே நாமெல்லாம் பல துறையில் மேம்பாடுறச் சுலபமான வழியாகும். அதுவுமன்றி மாதர் கூட்டங்கட்கும் போயிருந்து பலருடன் தங்கள் தங்கள் நோக்கங்களைப்பற்றி அளவளாவி, தங்கள்

அறிவை விசாலப்படுத்திக் கொள்வதுந் தகுந்த வழியே.

ஆகையால் எல்லா உண்மைத் தமிழ்ச் செல்வர் களும், அறிஞர்களும் மேற்கூறிய துறைகளில் உழைத்து இன்புற்று, நமது தமிழகம் பேரின்பப் பேறடையுமாறு துணைசெய்ய, எல்லாம் வல்ல வாலறிவன் நற்றாள்தொழுது வேண்டிக் கொள்கின்றேன்.

தமிழ்நாடு சிறந்து வாழ்க !

180864

The Sadhu Press, Madras.

THE TAMIL UNIVERSITY PUBLICATION SERIES—1

# WORDS MUST BE COUSIN TO DEEDS

(FEMALE EDUCATION)

J. N. RAMANAT